Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# “ வரலாற்றுச் சுவட்டில் இசை,நடனம் மற்றும் கலாச்சாரத்தின் முக்கியத்வம் “ அரையர் சேவை

36

**முனைவர் தி கி பார்த்தசாரதி , சென்னை**
**மின்னஞ்சல் tkpsarathy@gmail.com**

ஆய்வுச் சுருக்கம்:-
வைணவ சம்பிரதாயத்தில் தொன்று தொட்டு இன்றுவரை அரையர் சேவை என்பது இறைவனுக்கு அடியார்கள் செய்யும் விருப்ப தொண்டாகவே இருந்து வருகிறது. அதன் பின்னணி மற்றும் அரையர் சேவை பற்றிய கருத்துக்கள் இக்கட்டுரையில் இடம் பெற்றுள்ளன.

திறவுச் சொற்கள்:-. வைணவம், விஷ்ணு, அரையர் சேவை, திருவரங்கம், ஶ்ரீ வைகுந்தம், நம்மாழ்வார்

முன்னுரை

தமிழ் எனும் சொல்லிற்கு அழகு,இளமை,இனிமை என்று பல பொருட்கள் கூறலாம். ஆயினும் வைணவம் எனும் பொருளே பொருத்தமானது என்ப்து அடியேன் கருத்து. சங்க காலத்தையும், நீதிநூல் காலத்தையும் அடுத்து காணப் பெறுவது பக்தி இயக்கக் காலம். இக்காலத்தில்தான் ஆழ்வார் பெருமக்கள் தோன்றி பக்திப் பாசுரங்களைப் பாடி வைணவ சமயத்தைச் செழிக்கச் செய்தனர். பக்தி இயக்கம் தமிழையும் செழிக்கச் செய்தது. தமிழால் பக்தி இயக்கமும் ஏற்றம் பெற்றது. இவற்றால் நமக்குக் கிடைத்த செல்வம் கருவூலம் போன்ற சமய இலக்கியங்கள். தமிழ் இலக்கியத்தில் சமய இலக்கியக் கருவூலத்தை நீக்கிப் பார்த்தால் தமிழ் இலக்கியம் மிகுந்த வறுமை நிலையைக் காட்டும்1[1]

<u>வைணவமும் தமிழும்</u>

வைணவம் விட்டுணுவை முழுமுதற் கடவுளாகவும் அவரே இவ்வுலகின் தோற்றம் ,இருப்பு அழிவு இவைகளுக்குக் காரணம் என்றும் அவரே “அந்தமில் இன்பம்” எனப்படும் நீள் விசும்பான வைகுந்தம் அருளுபவர் என்றும் போற்றுகிறது. வைகுந்தம் என்பது அனைவருக்கும் பொதுவானது .உடலைவிட்டு ஆவி போனபின் அது வைகுந்தம் சென்று அங்குள்ள அவ்விறைவனுக்கு “ஒழிவிலா காலமெலாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்யும்” [2] நிலைமை நமக்கு கிடைக்க வழி செய்கின்றவரும் அவரே.

“இம்மண்ணில் பிறந்த அனைவருக்குமே வைகுந்தத்தில் இடம் உண்டு என்பது

வைணவத்தத்துவத்தின் திரண்ட நம்பிக்கை.இதனை தனது வைணவர்களின் மிக முக்கியமான நாலாயிர திவ்ய பிரபந்தங்களில் முகம் எனக் கருதப்படும திருவாய்மொழியில் நம்மாழ்வார் அழுத்தமாக உறுதிப் படுத்துகிறார்.

வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே [3]

“ஸ்ரீவைகுண்டநாதனுடைய அடியார்கள் நமக்கு விரும்பத்தக்கவர்கள்” என்று, திருவாசல் காக்கும் முதலிகள் ஆசையுடன் இருந்த விதத்தை அருளிச்செய்கிறார்.

ஸ்ரீவைகுண்டத்தில் சென்று புகுந்தவுடன், திருவாசல் காக்கும் முதலிகள் “ஸ்ரீவைகுண்டநாதனின் விருப்பத்துக்கு ஆட்பட்டவர்கள் நமக்கும் விரும்பத்தக்கவர்கள். எங்கள் இருப்பிடத்தில் வரவேண்டும்” என்று உகந்தார்கள். அங்கிருந்து எம்பெருமானுக்குத் தொண்டு புரியும் அமரர்களும் முக்தி அடைந்தவர்களும் “பூமியிலே தாழ்ந்த விஷயங்களில் மூழ்கியிருந்தவர்கள் பரமபதத்திலே புகுவது ஒரு பாக்யமே!” என்று உகந்தார்கள்

இந்த மண்ணில் பிறந்த அனைவருக்கும் வைகுந்தம் புகுவது விதி[3] –உரிமை என்கிறார் ஆழ்வார் ஏனெனில் அனைவரும் அறியவேண்டியது அனைத்து மக்களும் பிறப்பால் ஒன்றே. வேறுபாடு என்பது உடலுக்குத்தான் . பரமபதம் எனப்படும் வைகுந்தம் புக அனைவருக்குமே உரிமை உண்டு. அதன நேரம் மட்டுமே அவரவர் விதிப்பயனைப் பொருத்திருக்கும் என்பது வைணவர்களின் நம்பிக்கை.

வைகுண்ட ஏகாதசி

வைகுண்ட ஏகாதசியன்று விரதம் இருந்து திருமாலை வழிபடுவோர்க்கு, மனம் பக்குவம் அடைந்து, சரணாகதி நிலை உண்டாகி, அதன் விளைவாக வைகுண்டப் பதவி கிட்டும் என வைணவ நூல்கள் கூறுகின்றன. வைகுண்ட ஏகாதசியைச் சுற்றித்தான் நாம் காணப்போகும் அரையர் சேவை என்கின்ற முத்தமிழ் நிகழ்வு வைணவத்திருக்கோயில்களில் ஆண்டுதோறும் நடைபெறுகிறது .

அரையர் சேவை

அரையர் சேவை: சில குறிப்பிட்ட வைணவ ஆலயங்களில் இறைவன் முன் நடைபெறும் தொன்மையான வழிபாட்டு நிகழ்வு. ஆழ்வார் பாசுரங்களைப் பாடி அபிநயித்து உரைசொல்லி இக்கலையை நிகழ்த்துபவர் அரையர் எனப்படுவர். அரையர் சேவையில் இயல், இசை நடனம் என முத்தமிழும் பயின்று வரும். இதில் பள்ளு இலக்கியத்தில் சில கூறுகளை சேர்த்து நடிப்பர். 'கோவில் ஒழுகு' என ஸ்ரீரங்கம் கோவிலின் வரலாற்றைச் சொல்லும் நூலில் அரையர் சேவையைப் பற்றிய குறிப்பு உள்ளது

அரையர்கள்

இசைக்கலையில் வல்லமை படைத்த வைணவர்கள் இசைக்காரர்கள் என இராமானுசர் காலத்தில் அழைக்கப்பட்டனர்.(இராமானுசர் காலம் 1017-1137 கி.பி.). தனது 'திருவாய் மொழி' யினை தனக்குப் பின் மூவகையினர் பரப்புவர் என்பது ஆழ்வார் வாக்கு.

பாலேய் தமிழ ரிசைகாரர் பத்தர் பரவும் ஆயிரத்தின்

பாலே பட்ட இவைபத்தும் வல்லார்க் கில்லை பரிவதே [4] இப்பாடல் மூலம் நாம் பாலேய் தமிழர்களும் இசைக்காரர்களும் பக்தர்களும் திருவாய்மொழியைப் பரப்புவர் என்பது ஆழ்வாரின் நம்பிக்கை, இசைக்காரர் என்போரே தமிழ் பண்ணிசையை தாமிட்ட வழக்காக பெற்றவர்கள். இச்சொல்லின் பெருமை உணர்ந்த அக்கால ஆச்சார்யர்கள், ஆழ்வார் திருவரங்கப் பெருமாள் அரையரை இசைக்காரர் என்பார்களாம். திருவரங்கப் பெருமாள் அரையர் என்பவர் பன்னிரு ஆழ்வார்களின் ஈரச்சொல்லான நாலாயிர பாசுரங்களை உள்ளடக்கிய தொகுப்பான நாலாயிர திவ்விய பிரபந்தத்தினை உலகிற்கு காட்டிய நாதமுனிகளின் திருப் பேரனார் ஆவார். இவர்தான் பின்னர் உலகாரியர் இராமானுச முனியின் ஆசிரியராகவும் இருந்து அவருக்கு திவ்விய பிரபந்த பாசுரங்களை கற்றுக்கொடுத்தவர்.இவரே "'அரையர்"எனும் பட்டத்தினை தாங்கி இருக்கும் முதல் வைஷ்ணவ ஆசார்யர் ஆவார்.[5] (காலம் 1017 கி பி )

இவர் இசை,நாட்டியம் நாடகம் எனும் முத்தமிழிலும் வல்லுநர் .ஒரு முறை இவர் அரங்கன் முன் அபிநயத்துடன் திருவாய்மொழியினை அனுபவிக்கும் பொழுது பத்தாவது பதிகமான " கெடுமிட ராயவெல்லாம் கேசவா வென்ன,நாளும் கொடுவினை'6 எனும் தொடரில் வரும் "எழிலணி யனந்தபுரம், படமுடை யரவில்பள்ளி பயின்றவன் பாதம்காண,நடமினோ நமர்களுள்ளீர்! நாமுமக் கறியச்சொன்னோம்" என்று தனது திருத்தகப்பனாரும் ஆசார்யனுமான ஆளவந்தரைப் பார்த்து இசைத்தாராம்.இப்பதிகம் திருவனந்தபுரம் அனந்தபத்மநாபன் மேல் அருளப்பட்டது . இதனைக் கேட்ட ஆளவந்தார் ,இவ்வார்த்தையை நம்பெருமாள் வார்த்தை என சிரமேற்கொண்டு அன்றே திருவனந்தபுரம் கிளம்பினார் என்பது வரலாறு.அந்த அளவிற்கு அரையர்களின் தாக்கம் மக்களிடையே இருந்தது.

அரையர் சேவை

நம் பூர்வாச்சார்யர்கள் ( காலம் 11ம் நூற்றாண்டு முதல் 14ம் நூற்றாண்டு வரையில் ) நாலாயிர திவ்விய பிரபந்தங்களுக்கும் விளக்க நூல்கள் (வியாக்யானம் )அருளி உள்ளனர் .வைணவத்தின் சிறப்பே இந்த வ்யாக்யானங்களே . திருவாய்மொழிக்கு மட்டுமே ஐந்து

உயரிய விளக்க நூல்கள் உள்ளன. அந்த காலகட்டம் பற்றி சிறிது நாம் அறியவேண்டும். இராமானுசர் ஒன்பது கிரந்தங்களை வடமொழியில் அருளியுள்ளார். எந்த ஒன்றிலும் ஆழ்வார்கள், அவர்களது அருளிச்செயல் இவை இடம் பெறவில்லை

வேத மொழி எனப்படும் வடமொழிக்கு இணையாக தமிழையும் முன்னிறுத்தியது வைணவமே ! அதனால் தான் வைணவம் "உபய வேதாந்தம் " எனப் போற்றப்படுகிறது.சமஸ்க்ருத வேதங்களுக்கு நிகராக ஆழ்வார்களின் நாலாயிர திவ்ய பிரபந்தத்திற்கும் ஏற்றம் கொடுத்துள்ளனர் வைணவ ஆசார்யர்கள். இராமானுசர் தன மாமன் மகனான திருக்குருகைப் பிரான் பிள்ளானைக் கொண்டு திருவாய்மொழிக்கு திரு ஆறாயிரப்படி என்ற முதல் வ்யாக்யான நூலை அருளச் செய்தார். இந்த வ்யாக்யான நூல் தான் அதற்குப்பின் வந்த நஞ்சீயரின் ஒன்பதனாயிரப்படி ,பெரிய வாச்சான் பிள்ளை யின் இருபத்துநாலாயிரப்படி , நம்பிள்ளை அருளி வடக்குத்திரு வீதிப்பிள்ளை ஏடு படுத்திய முப்பத்தாறாயிரப்படி , அழகிய மணவாள ஜீயரின் பன்னீறாயிரப்படி போன்ற அருமையான மணிப்பிரவாள வ்யாக்யான நூல்களுக்கு முன்னோடி எனலாம். இவர்களைத் தொகுத்து மணவாள மாமுனிகள் இவர்கள் “திருவாய் மொழி காத்த குணவாளர்கள்” எனப் போற்றுகிறார்7 இவ்வுரை நூல்கள்தான் அரையர் சேவைக்கு வித்து எனலாம்.

<u>அரையர் சேவை தோற்றம்</u>

மேலை அகத்து ஆழ்வான் மற்றும் கீழை அகத்து ஆழ்வான் எனும் தன்னுடைய இரண்டு மருமகன்களுக்கும் நாதமுனிகள் நாலாயிர பிரபந்தங்களைப் பண் மற்றும் தாளத்துடன் கற்பித்ததாகவும் இவர்கள் வழி வந்தவர்களும் இவர்களிடம் கற்றவர்களுமே இன்று தமிழகமெங்கும் உள்ள அரையர்கள் என நம்பப்படுகிறது. முதன்முதலில் இச்சேவை திருவரங்கத்தில் தொடங்கப்பட்டது.

அரையர் சேவையில் இயல், இசை நடனம் என முத்தமிழும் பயின்று வரும். இதில் பள்ளு இலக்கியத்தில் சில கூறுகளை சேர்த்து நடிப்பர். 'கோவில் ஒழுகு' என ஸ்ரீரங்கம் கோவிலின் வரலாற்றைச் சொல்லும் நூலில் அரையர் சேவையைப் பற்றிய குறிப்பு உள்ளது.

ஸ்ரீரங்கம், ஸ்ரீவில்லிப்புத்தூர் போன்ற வைணவத் தலங்களில் மார்கழி மாதத்தில் அரையர் சேவை நடைபெறுகிறது. ஆழ்வார் திருநகரி, நாங்குனேரி வானமாமலை போன்ற வைணவ ஆலயங்களிலும் சில சமயம் நடைபெறும். கைசிக ஏகாதசி அன்றும் சில தலங்களில் அரையர் சேவை நடைபெறுவது உண்டு.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

திருமங்கை ஆழ்வார் (8 ம் நூற்றாண்டு) ,நம்மாழ்வாரின் திருவாய்மொழிப் பாசுரங்களை திரு அரங்கத்தில் அரங்கன் முன் இசைத்தாராம் .மிக்க உவகையுற்ற எம்பெருமான் மங்கை மன்னிடம் என்ன வேண்டுமென வினவ அதற்கு அவர் வைகுண்ட ஏகாதசி விழாவில் வேத முழக்கம் கோயிலில் முழங்குவதுபோல தமிழ் வேதமான திருவாய்மொழியும் ஒலிக்க வேண்டுமென்றாராம்.அதனை ஏற்றுக்கொண்ட எம்பெருமான் வைகுண்ட ஏகாதசிக்குப் பிறகு 10 நாட்கள் அவ்விழா நடக்கட்டும் என்று ஏற்றுக்கொண்டாராம். அதன்பின் .நம்மாழ்வாருக்குப் பெருமை சேர்த்த திருமங்கை ஆழ்வாருக்கும் உரிய அங்கீகாரம் கிடைக்கும் வண்ணம் அவரது திருமொழிப் பாடல்களுள் மற்ற ஆழ்வார்கள் பாடிச்சென்ற பாசுரங்களையும் அரங்கன் கேட்கும் வண்ணம் வைகுண்ட ஏகாதசிக்கு முன்பத்து நாட்களும் தனி விழாவாக எடுக்கப்பட்டது. இவை முறையே இராப்பத்து .பகல்பத்து என்று பெயரிடப்பட்டு இடைப்பட்ட வைகுண்ட ஏகாதசிக்குப் பின் 10 நாட்களென மொத்தம் 20 பெருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது இக்காலத்திற்குப் பெயர் அத்யயன காலம் என்று பெருமையுடன் இன்றும் இது நடைபெறுகிறது.

நடைபெறும் முறை

வைணவ குருபரம்பரை நூல்களின்படி அரையர் சேவை கி.பி. 10-ஆம் நூற்றாண்டு நாதமுனிகள் காலத்தில் இருந்து வழக்கில் உள்ளது. திருமங்கையாழ்வாரால் தொடங்கப்பட்டு இடையில் நின்று போன சேவையை நாதமுனிகள் வளர்த்தெடுத்திருக்கலாம். ஸ்ரீராமானுஜர் இதனை விரிவுபடுத்தி ஆழ்வார் பாசுரங்களின் பொருளையும் தத்துவங்களையும் மக்களுக்கு அறியும் வகையில் நடித்துக்காட்ட ராமானுஜடியார் எனச் சிலரை நியமித்தார். இவர்களின் கடமைகள் சலுகைகள், நியமங்கள் ஆகியன வரையறுக்கப்பட்டன

அரையர் சுவாமிகள் எனப்படுபவர் நாதமுனிகளின் பரம்பரையில் வந்தவர்கள் எனக் கருதப்படுகின்றனர். நாதமுனியின் திருப்பேரனார் யமுனைத் துறைவர் (ஆளவந்தார்), அவரது திருமகனார் திருவரங்கத்து பெருமாள் அரையர். அப்பரம்பரையின் நீட்சியே அரையர் சுவாமிகள் எனக் கருதப்படுகிறது

மார்கழி மாத அத்யயன உற்சவம் விழாவில் (இருபது நாட்கள்-மார்கழி அமாவாசை தொடங்கி பத்து நாட்கள் பகல்பத்து, வைகுண்ட ஏகாதசியைத் தொடர்ந்து வரும் பத்து நாட்கள் ராப்பத்து) அரையர் சுவாமிகள் உற்சவ மூர்த்தியான பெருமாள் முன் தமது சேவையைத் துவங்குவார். இறைவன் அவரைத் தன் முன் வரப் பணிப்பார். பெருமாளின்

உத்தரவைப் பெறும் சடங்கு அருளப்பாடு எனப்படும். அரையர் "*ஆயிந்தேன், ஆயிந்தேன்*" எனக் கூறியபடி தலையில் ஒரு சரிகை வேலைப்பாட்டுடன், வைணவச் சின்னங்கள் பொறிக்கப்பட்ட '*சிகாமணி என்னும் சிவப்புப் பட்டுத் தலையணியும்,* கர்ணபத்ரம்' எனப்படும் காதை மறைக்கும் பட்டைகளும் அணிந்து கொண்டு வருவார். ( நாயிந்தே என்று சொல்வார்கள் என்றும், அதன் பொருள் “நான் இங்கே” என்றும் கூறப்படுகிறது) பட்டர் இறைவனுக்கு அணிவிக்கப்பட்ட பரிவட்டத்தினை அவரது தலையில் கட்டி பெருமாள் மாலையையும் அணிவிப்பார். உற்சவ மூர்த்திக்கு முன் அரையர் சுவாமிகள் கையில் குழித்தாளங்களை ஏந்திக் கொண்டு பெருமாள் - தாயார் முன் பாடல்களும், பாசுரங்களையும் பாடி தன் சேவையைத் துவங்குவார். திருமாலைப் போற்றிப் பாடும் கொண்டாட்டம் என்ற நிகழ்வுடன் தொடங்கும் அரையர் சேவை மூன்று பகுதிகளைக் கொண்டது.

1.அன்றைக்கான பாடல்களை அரையர் இசையுடன் பாடுவது

2.பாடலுக்கான அபிநயம் பிடித்து அரையர் ஆடுவது. அரையர் ஒருவரே பல்வேறு பாத்திரங்களாக வேடம் மாற்றாது அபிநயிப்பார். காட்சி மாற்றங்கள் பாத்திரங்களின் சொற்கள் வழியாகவே புலப்படுத்தப்படும். பாசுரத்தின் ஒரு தொடருக்கு பல்வேறு நிலைகளில் அபிநயம் செய்யும் வழக்கமும் உண்டு.

3.பாசுரங்களுக்கு விளக்கம் சொல்லும் தம்பிரான் படி வியாக்கியானம். அரையர் இசை வடிவில் வியாக்கியானத்தைக் கூற மற்றொரு அரையர் ஏட்டை வைத்து விளக்கத்தைச் சரிபார்ப்பார்.இறுதியில் மறுபடியும் கொண்டாட்டம் நடைபெறுகிறது.

பலவிதமான சேவைகள் அந்தந்த நாட்களின் முக்கியத்துவம் பொறுத்து அமையும். ஸ்ரீரங்கத்தில் பகல்பத்து நான்காம் நாள் கம்ச வதமும், ஏழாம் நாள் வாமன அவதாரமும், எட்டாம் நாள் பாற்கடல் கடைதலும், பத்தாம் நாள் ராவண வதமும் அபிநயங்களால் நடித்துக்காட்டப்படுகின்றன. இக்கதைகள் அனைத்தும் பிற்பகலில் நடைபெறுகின்றன. ஆண்டாள் திரு அவதாரம் போன்ற சில கதைகள் சில விசேஷ நாட்களில் பாடப்படும். கர்நாடக மாநிலத்தில் உள்ள மேல்கோட்டை ஸ்ரீநரசிம்ம பெருமாள் கோயிலில், அபிநயம் இல்லாமல் தாளத்தோடு மட்டும் அரையர் சேவை நடந்து வருகிறது.

<u>தம்பிரான் படி</u>

அரையர்களின் பாடல்களும் அபிநயங்களும் தாளங்களும் தம்பிரான்படி வ்யக்யானங்களும் அரங்கனுக்கு அர்ப்பணிக்கும் அனைத்துமே ஆயிரம் ஆண்டுகளாக பாதுகாக்கப்படுகின்றன.நாலாயிரத்தை தேமதுர செந்தமிழில் மரபாகப்

பயின்றுவருகின்றனர்.அரங்கனின் கைங்கர்யபரர்கள் அரையர்களை கோயிலுக்குள் அழைத்துச் செல்வர். அப்போது அரங்கனே தனது குல்லாவையும் பரிவட்டத்தையும் அவர்களுக்கு கொடுத்ததாக நம்பப்படுகிறது..அவைகளைத்தான் அரையர்கள் அணிந்து கொண்டிருப்பதாக நம்பிக்கை. அவர்கள் கரங்களில் இருக்கும் இரண்டு தாளங்களில் ஒன்று நம்மாழ்வார் என்றும் மற்றொன்று நாதமுனிகள் என்றும் நம்பப்படுகிறது.

பகல் பத்தின் ஒன்பதாம் நாள் அரையர் சேவையில் 'முத்துக்குறி' என்னும் நிகழ்ச்சி நடைபெறும். பல ஆழ்வார் பாடல்கள்(குறிப்பாக நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் பாசுரங்கள்) நாயகன்- நாயகி பாவம் கொண்டவை; அகத்துறை சார்ந்தவை. திருமால் மேல் காதல் கொண்டு உருகும் தலைவிக்கு, கட்டுவிச்சி எனும் குறிசொல்பவள் முத்துக்குறி சொல்லும் நிகழ்ச்சியில் அரையர் சுவாமிகளே தலைவி, தாய், கட்டுவிச்சி ஆகிய பாத்திரங்களை மாறி மாறி அபிநயிப்பார். திருநெடுந்தாண்டகத்திலிருந்து[1] 11 பாடல்கள் இத்தினத்தில் பாடி அபிநயிக்கப்படுகின்றன. பட்டுடுக்கும் எனத் தொடங்கும் பாடலின் இறுதியில் சோழிகளுக்குப் பதிலாக முத்துக்களை வைத்துக் குறி சொல்வதால் இது *முத்துக்குறி* எனப்பட்டது. இறுதியில் கட்டுவிச்சி தலைவியை கடல் வண்ணன் காத்துக் கொள்வான் என்று குறி சொல்லி முடிப்பாள்.

நம்மாழ்வார் மோட்சம்

இராப்பத்து இறுதி நாளன்று நம்மாழ்வார் சிலையை நம் பெருமானின் பாதத்தில் ஒப்படைத்து ஆழ்வார் முக்தி பெறுதலோடு அரையர் விழா நிறைவு பெறும் .

கோயிலோழுகு கூறும் சில அரையர்கள்

கோயிலொழுகு என்பது திருவரங்கம் கோயிலின் நாட்குறிப்பு எனலாம் கோயிலின் தோற்றம் முதல் இந்த நூற்றாண்டு வரையிலான கோயில் நிகழ்வுகள் அனைத்தும் இடம் பெரும் ஒரு அறிய வரலாற்றுப் பேழை அதில் காணும் சில அரையர்களின் பெயர்களை மட்டும் இங்கு குறிப்பிடலாம்..

பிள்ளத் திருநறையூர் அரையர், பிள்ளை அழகிய மணவாள அரையர், ஐயன் திருக்குருகைப் பெருமாள் அரையர், பிள்ளை தேவப்பெருமாள் அரையர், ஆழ்வார் திருவரங்கப் பெருமாள் அரையர் திருநாராயணபுரத்து அரையர், ராஜநாராயணப் பெருமாள் அரையர், திருக்கண்ணபுரத்தரையர்.

இந்த அரையர் கொண்டாட்டம் என்பது ஒரு மன்னரை கட்டியக்காரன் புகழ்ந்து சொல்வதைப்போல ஸ்ரீரங்கநாதரின் பெருமைகளை அரையர்கள் நீண்டி முழக்கி சொல்வதாகும்.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

உதாரணமாக பகல்பத்தின் முந்தைய தினம் திருநெடுந்தாண்டகத்துடன் உற்சவம் ஆரம்பமாகும்போது அரையர் கொண்டாட்டத்துடன் இவ்வாறு ஆரம்பிப்பார்

“பொங்குசீர் வசனபூடணமீந்த உலகாரியன் போற்றிடத் திகழும் பெருமாள்”

“போதமணவாள மாமுனி ஈடுரைப்பது கேட்டுப் பூரித்து நின்ற பெருமாள்”

இதில் முதலாவதாக குறிக்கப்படுபவர் ஶ்ரீவசனபூஷணம் என்ற நூலை இயற்றிய பிள்ளைலோகாச்சாரியர். தனது முதுமை வயதைப் பொருட்படுத்தாமல் படையெடுப்பின்போது உற்சவர் விக்ரகத்தை காப்பாற்றி அழகர் கோவில்வரை கொண்டு சென்றதால் முதன்மையாக ஆரம்பிக்கும்போதே நினைகூறப்படுகிறார். ஒருவருடம் அனைத்து உற்சவங்களையும் நிறுத்திவைத்து மணவாளமாமுனிகள் திருவாய்மொழிக்கு பொருள் சொன்னதை உற்சவர் பூரித்து கேட்ட வைபவம் இரண்டாவது கொண்டாட்டத்தால் சுட்டப்படுகிறது

ஏராளமான ராமாயண மகாபாரத நிகழ்வுகள்,ஆழ்வார் ஆச்சார்யர்களின் பெருமைகள், திருவரங்கத்து பெருமைகள் இந்த அரையர் கொண்டாட்டத்தின் போது கூறப்படுகின்றன. எடுத்துக்காட்டாக

“பாஞ்சாலி குழல் முடித்து பரிபவம் தீர்த்த பெருமாள்-தடிபெற்ற கீர்த்தியால் கொடி பெற்ற ராவணன் முடி பத்து அறுத்த பெருமாள்-நலங்கொண்ட தோள் அசுரர் குலங்கொண்டு மாய்ந்திட பலங்கொண்டு எழுந்த பெருமாள்- சாய்த்ததொடு மரத்தினொடு தோய்த்த நறு தயிருண்டு பசுமேய்த்து அவனிகாத்த பெருமாள்-பஞ்சவர் தூதனாய் பாரதம் கைசெய்த பெருமாள்-ஆபரணங்களுக்கு அழகு சேர்க்கும் பெருமாள்-ஏழு மதில் சூழ் கோவிலுடைய பெருமாள்-என அவன் பெருமை பரக்கப் பேசப்படும்

நாலாயிர திவ்யபிரபந்தத்தில் ஒருவொரு ஆழ்வார்களின் பாடல்களுக்கு முன்பும் தனியன் எனப்படும் தனிப்பாடல்கள் தமிழிலும் வடமொழியிலும் உள்ளன. அவற்றை அரையர்கள் பாடுவதில்லை. அதற்க்கு பதிலாக அரையர் கொண்டாட்டம் சொல்லப்படுகிறது. கிட்டத்தட்ட ஆயிரம் ஆண்டுகளாக நிகழ்ந்துவரும் இக்கலை முழுக்க முழுக்க தமிழுக்கானது. தமிழ் பாசுரங்களை ஏற்றம் பெறச்செய்வதாக அமைந்தது. இப்பாசுரங்களை பாடும் அரையர்களுக்கு இராப்பத்து உற்சவ கடைசியில் நிறைவான மரியாதை அளிக்கப்படுகிறது.

முடிவுரை

இராமானுசர் விளக்கிய விசிஷ்டாத்வைதம் என்ற தத்துவத்தில் ஆதி பரம்பொருள் நாராயணன் என்ற திருமாலே. அவன்தான் உபநிடதங்கள் கூறும் பிரம்மம். அவன் குணம்

என்ற குன்றேறித் தாண்டியவன் என்று உபநிடதங்கள் கூறுவதன் உட்பொருள் அவனிடம் எல்லா நல்ல குணங்களும் இருக்கின்றன என்பதாம். அறம், ஞானம், சக்தி, அன்பு இவை யாவும் முடிவிலாத அளவுக்கு அவனிடம் உள்ளன. அவன் உயிரினங்களிடம் வைத்திருக்கும் எல்லையற்ற கருணையினால் அவ்வப்பொழுது அவதரித்து இடர் போக்கி தன்னுடன் சேர்ந்துகொள்ள வழி வகுக்கிறான். அவன் நீக்கமற ""கரந்து எங்கும் பரந்துளன் ' 8 என்னுள்ளும் உள்ளான் புறமும் உள்ளான்

உலகம் அவன் உடல்.அவன் உலகத்திற்கே ஆன்மா என்பது வைணவ தத்துவம்.ஒவ்வொருவர் உள்ளத்திலும் அவன் உள்ளான்.அனைவர் உள்ளமும் அவன் இருப்பிடம் என்றால் உலகில் வேறுபாடு ஏது? அந்த கடந்தும் உள்ளும் இருக்கும் கடவுளைத் தாங்கி நிற்கும் மனிதர்கள் அனைவரும் நிறத்தால் ,உருவத்தால் வேறுபடினும் அனைவரும் ஒன்றே ! இந்த உயரிய எண்ணம் உடைய வைணவ சமயம் அதன் தத்துவமான விசிஷ்டாத்வைதம் இரண்டையும் கீழ்கண்டவாறு விவரிக்கலாம்.வைணவ சமயம் தமிழோடு இணைந்தது என்றால் அதனைச் சார்ந்த தத்துவம் சமூக நல்லிணக்கத்தினை வலியுறுத்துகிறது எனலாம்

எனவே இவைகளின் வெளிப்பாடான அரையர் சேவை தமிழ் ,பக்தி இவைகளை தமிழ் உலகிற்கு உணர்த்தி நம்மையும் மகிழ்விக்கு ஒன்று என்றால் அது மிகை ஆகாது.

துணை நூற்பட்டியல் :-
1 வைணவமும் தமிழும் –ந சுப்புரெட்டியார்

மேற்கோள்கள்:-

2. ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி,
வழுவிலா அடிமை செய்ய வேண்டும்நாம்,
தெழிகு ரல்அரு வித்திரு வேங்கடத்து,
எழில்கொள் சோதி எந்தைதந்தை தந்தைக்கே-
நம்மாழ்வார் .திருவாய்மொழி 3.3.1

3. வைகுந்தம் புகுதலும் வாசலில் வானவர்
வைகுந்தன் தமர் எமர் எமது இடம் புகுத என்று
வைகுந்தத்து அமரரும் முனிவரும் வியந்தனர்
வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே -

நம்மாழ்வார் .திருவாய்மொழி (10.9.9

4 மாலே மாயப் பெருமானே மாமா யனே என்றென்று
மாலே யேறி மாலருளால் மன்னு குருகூர்ச் சடகோபன்
பாலேய் தமிழ ரிசைகாரர் பத்தர் பரவும் ஆயிரத்தின்
பாலே பட்ட இவைபத்தும் வல்லார்க் கில்லை பரிவதே
நம்மாழ்வார் திருவாய்மொழி 1.5.10

5 இசைக்காரர் என்றால் திருவரங்கப் பெருமாள் அரையர் என்பார் ஆழ்வான் (கூரத்து ஆழ்வான்)- நம்பிள்ளை –ஈடு வியாக்யானம் 3.3.1.

6 கடுவினை களையலாகும் காமனைப் பயந்தகாளை,
இடவகை கொண்டதென்பர் எழிலணி யனந்தபுரம்,
படமுடை யரவில்பள்ளி பயின்றவன் பாதம்காண,
நடமினோ நமர்களுள்ளீர்!நாமுமக் கறியச்சொன்னோம் -
நம்மாழ்வார் .திருவாய்மொழி 10.2.8

7 பிள்ளான் நஞ்சீயர் பெரியவாச்சான் பிள்ளை
தெள்ளார் வடக்குத் திருவீதிப்-பிள்ளை
மணவாள யோகி திருவாய் மொழி காத்த
குணவாளரென்று நெஞ்சே கூறு -
மணவாள மாமுனிகள் (உபதேச ரத்ன மாலை)

8 திடவிசும்பு ஏரி வளி நீர் நிலம் இவை மிசை
படர் பொருள் முழுவதுமாய் அவையவை தொறும்
உடன்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்
சுடர்மிகு சுருதியுள் இவை உண்ட சுரனே -
நம்மாழ்வார் .திருவாய்மொழி 1.1.7